**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.0114/ஆ1/2025, நாள். 02.2025.**

---

பொருள் : பள்ளிக் கல்வி – ஆதிதிராவிடர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்கள் கல்வி தரத்தை மேம்படுத்த தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்துதல் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் 6ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை மற்றும் 9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு ஆதிதிராவிடர் முடிய மற்றும் பழங்குடியின மாணவியர்களை அதிக அளவில் பள்ளியில் சேர்த்த தலைமை ஆசிரியர்கள் விவரம் கோருதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை நிலை எண்.228. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.7) துறை, நாள்: 13.11.2019.
2. அரசாணை (ப) எண்.236, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந. 7) துறை, நாள்.09.12.2024.
3. சென்னை–5. ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.உ3/25199/2024, நாள்.05.02.2025.
4. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.002266/இ/,2/2025, நாள்.18.02.2025.

-----

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளின் கல்வி தரத்தை மேம்படுத்த தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024 – 2025 ஆம் கல்வி ஆண்டில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை மற்றும் 9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு முடிய கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு அதிகமான அளவில் மாணவிகளை பள்ளியில் சேர்த்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்க பார்வை (2) இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 2024–2025– ஆம் கல்வியாண்டில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை மற்றும் 9 –ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு முடிய ஆகிய இரண்டு நிலைகளிலும் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசுகள் என மாணவியர்களை அதிக அளவில் பள்ளியில் சேர்த்த தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டத்திற்காக தலைமை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்கும் பொருட்டு அதிக அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளை பள்ளியில் சேர்த்த தலைமை ஆசிரியர்களின் விவரங்களை இணைப்பில் காணும் (Google Sheet ) Link –ல் பதிவேற்றம் செய்தும் அதன் நகலில் தலைமை ஆசிரியரின் கையொப்பமிட்டு இவ்வலுவலக ஆ1 பிரிவு எழுத்தரிடம் 24.02.2025 காலை 11.30 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு/ அரசு உதவி பெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு :**

Google Sheet Link (படிவம் –1 மற்றும் 2)

// ஒப்பம் //
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

**பெறுநர் :**

அரசு / உதவி பெறும் உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.

**நகல் :**

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கையின் பொருட்டு.
2. கோப்பிற்கு.

(பா.க)